காலத்தை வென்ற காதல் பாடல்கள்

நிம்மதியும் சந்தோஷமும் ஒன்று சேர தரும் வாய்ப்புகள்

மலரும் நினைவுகள், அந்த கால பாடல்களை வாய் விட்டு பாடு வோமா?

**காதல் என்றால் சின்ன சின்ன பொய்கள் சின்ன சின்ன ஆசைகள்**

1 கண்களால் கண்களில் தாயம் ஆடினாய்

கைகளால் கைகளில் ரேகை மாற்றினாய்

கன்னக்குழி நடுவே சிக்கிக்கொண்டேன் அழகே

நெற்றிமுடி வழியே தப்பி வந்தேன் வெளியே

பொய் சொல்ல கூடாது காதலி

பொய் சொன்னாலும் நீயே என் காதலி

**அப்பறம்**?

2 என்னில் இன்று நா...னே இல்லை

காதல் போல ஏதும் இல்லை

எங்கே எந்தன் இதயம் அன்பே

வந்து சேர்ந்ததா

முதன் முதலில் பா...ர்த்தேன்

காதல் வந்ததே

எனை மறந்து எ...ந்தன்

நிழல் போகுதே

**இளமையில் மட்டும் தானா**?

3 ஆண் : இந்த இளமை
போகலாம் முதுமை
சேரலாம் இருவர்
காதலும் மாறுமோ

ஆண் & பெண் : நாளாம் நாளாம்
திருநாளாம் நங்கைக்கும்
நம்பிக்கும் மண நாளாம்
இளைய காதலர் மேகங்கள்
என்னும் இந்திரன் தேரில்
வருவாராம்

**ஓஹோ இந்த ஜென்மம் மட்டும் தானா** ?

4 வாவென்று கூறாமல் வருவதில்லையா
காதல் தாவென்று கேளாமல் தருவதில்லையா
சொல்லென்று சொல்லாமல் சொல்வதில்லையா
இன்பம் சுவையாக சுவையாக வளர்வதில்லையா

எங்கே என் காலமெல்லாம் கடந்து விட்டாலும்
ஓர் இரவினிலே முதுமையை நான் அடைந்து விட்டாலும்
மங்கை உன்னை தொட்ட உடன் மறைந்து விட்டாலும்
நான் மறுபடியும் பிறந்து வந்து மாலை சூடுவேன்

**பருவம் என்றால் என்ன** ?

5 காலத்தின் அடையாளம் பருவங்களேயாகும்
காதலர்கள் நடத்துவது கண் சேர்தல் ஆகும்
காதலர்கள் நடத்துவது கண் சேர்தல் ஆகும்
இது வரையில் புது உலகம் நாம் கண்டதுமில்லை
எது வரையில் சென்றாலும் எல்லை இதற்கில்லை

விண்ணுக்கு மேலாடை பருவ மழை மேகம்
வீணைக்கு மேலாடை நரம்புகளின் கூட்டம்

**காதலில் நிலவுக்கும் நிலத்துக்கும் என்ன சம்பந்தம்** ?

**6** ஆண் : மலர் போன்ற பாதம்...
நடக்கின்ற போது...
நிலம் போல உன்னை...
நான் தாங்க வேண்டும்...

ஆண் : வா வெண்ணிலா உன்னைத்தானே வானம் தேடுதே...
வா வெண்ணிலா உன்னைத்தானே வானம் தேடுதே...

**அப்போ தூக்கம்**?

7 புல் தூங்கும் பூவும் தூங்கும்
புதுக்காற்றும் தூங்கும்
தூங்காதே நம் கண்கள்தான்
ஏங்காதே இது காதல்தான்

டிங் டாங் கோயில் மணி
கோயில் மணி நான் கேட்டேன்
உன் பேர் என் பெயரில்
சேர்ந்தது போல் ஒலி கேட்டேன்

**வெட்கம்**?

8 ஆண் : முகத்தை முகத்தை மறைத்துக்கொண்டால்

பார்க்க முடியுமா..

பெண் : இன்று பார்த்து பார்த்து

முடித்துக்கொண்டால்

நாளை வேண்டுமே..

ஆண் : நிலவும் மலரும் பாடுது

என் நினைவில் தென்றல் வீசுது

நிலை மயங்கி மயங்கி காதலினால்

ஜாடை பேசுது...

**வயசு ஆச்சின்னா**?

9 வாலிபங்கள் ஓடும் வயதாகக்கூடும்

ஆனாலும் அன்பு மாறாதம்மா

மாலையிடும் சொந்தம் முடிபோட்ட பந்தம்

பிரிவென்னும் சொல்லே அறியாதம்மா

கல்யாண மாலை

கொண்டாடும் பெண்ணே

என் பாட்டைக் கேளு

உண்மைகள் சொல்வேன்

**காதலா கடவுளா** ?

10 அந்த கடவுளை விடவும் பெரியவன் ஒருவன்
பூமியில் உள்ளான் எவன்?
பெண் கண்களை பார்த்து காதலை சொல்லும்
தைரியம் உள்ளவன் அவன் அவன் அவன்

குமாரி.... என் காதல் சிக்கி முக்கி

திக்கி விக்குது குமாரி...

நீங்கள் நினைப்பது கேட்கிறது. என்னுடைய காதல் எவ்வாறு என்று?

'காதலிக்க நேரமில்லை காதலிப்பார் யாரும் இல்லை'!

- ரவிக்குமார்